**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை**

**கரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(30.07.2022 முதல் 03.08.2022)**

**அறிக்கை எண்: 60/2022** **தேதி: 29.07.2022**

## கரூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33 °செ முதல் 36 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 23 °செ முதல் 25 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

## கரூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (30.07.2022 முதல் 03.08.2022)

| கடந்த வார வானிலை (26.07.2022 முதல் 28.07.2022) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (30.07.2022 முதல் 03.08.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 26/07 | நாள்-2 27/07 | நாள்-3 28/07 | தேதி | நாள்-1 30/07 | நாள்-2 31/07 | நாள்-3 01/08 | நாள்-4 02/08 | நாள்-5 03/08 |
| 0 | 9.6 | 0 | மழை (மி.மீ.) | 4 | 6 | 18 | 3 | 3 |
| 36 | 34 | 33 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 35 | 35 | 34 | 34 | 34 |
| 25 | 23 | 25 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 26 | 26 | 24 | 24 | 24 |
| 8 | 6 | 5 | மேகமூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 7 | 7 | 5 |
| 93-74 | 86-59 | 81-55 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70-60 | 70-60 | 75-65 | 75-60 | 70-60 |
| 10 | 10 | 11 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 8 | 12 | 12 | 12 | 12 |
| வட வட கிழக்கு | கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு | மேற்கு |

## கரூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 30.07.2022 முதல் 03.08.2022 வரை தினமும் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34 °செ முதல் 35 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24 °செ முதல் 26 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 65 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8-12 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | வரும் நாட்களில் மிதமானது முதல் கனமழை பெய்யும் என்பதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும். |
| | | பயிர்களுக்கு உரம் இடுவது மற்றும் பூச்சி மருந்து தெளிப்பதைத் தவிர்க்கவும். |
| வாழை | | வாழை சாகுபடி செய்யும் விவசாயிகள் வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும். |
| கால்நடைகள் | ஆடு மற்றும் மாடு | எதிர்பார்க்கப்படும் மழையால் கன்றுகள் மற்றும் ஆட்டுகுட்டிகளுக்கு சளி போன்ற உபாதைகள் ஏற்பட்டு நுரையீரல் அழற்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மழை சாரல் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். |

## குறுஞ்செய்தி

வரும் நாட்களில் மிதமானது முதல் கனமழை பெய்யும் என்பதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும்.

**இயக்குநர்**